©
GOVERNMENT OF TAMIL NADU
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[Price : Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 2] CHENNAI, WEDNESDAY, JANUARY 14, 2009
Thai 1, Thiruvalluvar Aandu–2040

## Part VI—Section 3(a)

**Notifications issued by cost recoverable institutions of State and Central Governments.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**CONTENTS**

*Pages.*

GENERAL NOTIFICATIONS

**தமிழ்நாடு வக்ஃப் வாரியம்**

வக்ஃப் சட்டம்—அஷ்ரப் ஷா சாஹிப் மற்றும் ஃபரீத் அலி சாஹிப் தைக்கால் வக்ஃப் கதவு எண் 1, செயின்ட் மேரீஸ் ரோடு, மந்தைவெளி, சென்னை–600 028 தொடர்பான பொது அறிவிப்பு .. .. 4

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### GENERAL NOTIFICATIONS

**தமிழ்நாடு வக்ஃப் வாரியம்**

**எண் 1, ஜாபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–600 001.**

**அஷ்ரப் ஷா சாஹிப் மற்றும் ஃபரீத் அலி சாஹிப் தைக்கால் வக்ஃப், கதவு எண் 1, செயின்ட் மேரீஸ் ரோடு, மந்தைவெளி, சென்னை–600 028 தொடர்பான பொது அறிவிப்பு.**

*(ந.க.எண் 12447/ஆ2/03/சென்னை)*

No. VI (3(a)/2/2009.

1995ஆம் வருடத்திய வக்ஃப் சட்டம், பிரிவு 51–ன்படியும், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் இனம் எண் 136/03, ந.க. எண் 12447/03/ஆ2/சென்னை, நாள்: 27–8–2008 நாளிட்ட தீர்மானத்தின்படி சென்னை, மந்தைவெளி எண் 1, செயின்ட் மேரீஸ் சாலை, மைலாப்பூர் கிராமம், பிளாக் எண் 89, ஆர்.எஸ்.எண் 4126/2–ல் உள்ள அஷ்ரப் ஷா சாஹிப் மற்றும் ஃபரீத் அலி சாஹிப் தைக்கால் வக்ஃபிற்கு சொந்தமான 18 கிரவுன்டுகள் மற்றும் 277 சதுர அடி மொத்த விஸ்தீரணத்திற்குட்பட்ட 13,158 சதுர அடி நிலத்தில் மொத்தம் 20,000 சதுர அடி கட்டுமான பரப்பில் தரைத் தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் மேல்தளம் கொண்ட கட்டுமானமாக ரூ. 2,27,69,100/– திட்ட மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் மற்றும் திருமண மண்டபத்தை மேற்படி அஷ்ரப் ஷா சாஹிப் மற்றும் ஃபரீத் அலி சாஹிப் தைக்கால் வக்ஃப் மற்றும் மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் வக்ஃப் இணைந்து கூட்டு முயற்சி மேம்பாட்டுத் திட்டம் (Joint Venture Development Scheme) கீழ் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அஷ்ரப் ஷா சாஹிப் மற்றும் ஃபரீத் அலி சாஹிப் தைக்கால் வக்ஃபிற்கு (முதல் பார்ட்டி) சொந்தமான நிலத்தை திருமண/சமுதாயக் கூடம் கட்டுவதற்காக மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் வக்ஃபிடம் (இரண்டாவது பார்ட்டி) ஒப்படைத்து விடவேண்டும்.

இரண்டாவது பார்ட்டி தனது சொந்த செலவில் மாநகராட்சி/சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும ஒப்புதல் பெற்று திருமண/சமுதாயக் கூடம் கட்ட வேண்டும்.

முதல் பார்ட்டிக்குச் சொந்தமான இடத்தில் இரண்டாவது பார்ட்டி திருமண/சமுதாயக் கூடம் கட்ட அனுமதித்ததற்குப் பிரதி பலனாக திருமண/சமுதாயக் கூடத்திலிருந்து சொத்து வரி நீங்கலாக அனைத்து செலவுகளும் போக வரும் நிகர வருமானத்தை முதல் பார்ட்டியும், இரண்டாவது பார்ட்டியும் 50:50 விழுக்காடு என்ற அடிப்படையில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

திருமண/சமுதாயக் கூடம் கட்டப்பட்ட பிறகு நிலத்தின் உரிமை தொடர்ந்து முதல் பார்ட்டியிடமும் இரண்டாவது பார்ட்டியால் கட்டப்பட்ட கட்டிடம் முழுமையாக மேற்படி இரண்டாவது பார்ட்டிக்கு உரிமை உடையதாக இருக்கும் என ஒத்துக் கொள்ளப்பட்ட இரு வக்ஃப் நிறுவனங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஷரத்துகளின் (Draft Development Agreement) அடிப்படையிலும் இரு வக்ஃப் நிறுவனங்கள் பயனடையும் வகையிலும் வக்ஃப் சொத்தை முன்னேற்றும் விதமாக நிறைவேற்றப்படவிருக்கும், மேற்படி திட்டம் குறித்த ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளை இவ் விளம்பரம் பிரசுரமான தினத்திலிருந்து 15 நாட்களுக்குள் "**முதன்மை செயல் அலுவலர்**" தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண் 1, ஜாபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–600 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது.

சென்னை–600 001,
22 டிசம்பர் 2008.

அ. முகமது ஜமாலுதீன்,
*முதன்மைச் செயல் அலுவலர்,*
*தமிழ்நாடு வக்ஃப் வாரியம்.*

PRINTED AND PUBLISHED BY THE PRINCIPAL SECRETARY TO GOVERNMENT AND
DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU